## ஊரக வளர்ச்சி – ஊராட்சித் துறையின் சார்பில் – ரூ.177.85 கோடி மதிப்பில்–18 மாவட்டங்களில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - 34 உயர் மட்டப் பாலங்கள் கட்ட உத்தரவு!

## “அரசாணை வெளியீடு! கட்டுமானப் பணிகள் உடனடியாகத் தொடங்கும்” என அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.21-

**“முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ.177.85 கோடி மதிப்பீட் டில் 18 மாவட்டங்களில் 34 உயர்மட்டப் பாலங்கள் கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார். இதற்குரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. பாலங்களின் கட்டுமானப்பணிகள் உடனடியாகத் தொடங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.**

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசு மாநில நிதித்திட்டத்தின்கீழ் 2024 -25 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ.177.85 கோடி மதிப்பீட்டில் 34 உயர்மட்ட பாலங்கள் அமைக்க உத்தர விட்டுள்ளார்கள். 17.12.2024 அன்று இதற்குரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே தமிழ்நாடு அரசின் முக்கிய நோக்கமாகும். அதன்படி, ஊரகப் பகுதிகளில் அடிப்படைத் தேவைகளான சாலைகள், உயர்மட்ட பாலங்கள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்குதல் மற்றும் சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்குகள் போன்றவற்றை ஏற்படுத்தி, புதிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி அதனைத் திறம்படச் செயல்படுத்தி, தமிழ்நாடு அரசு நாட்டிலேயே முன்னோடியாக விளங்கி வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில், ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் மற்றும் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் இணைப்பு வசதி இல்லாத குடியிருப்பு பகுதிகளில் தேவைப்படும் உயர்மட்ட பாலங்களை முன்னுரிமைப்படுத்தி, 18 மாவட்டங்களில் 1977.20 மீ நீளமுள்ள 34 உயர்மட்ட பாலங்கள் ரூபாய் 177.85 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த ஆணையின்படி:

கோவை மாவட்டம் காரமடை வட்டத்தில் சிக்காரபாளையம் கருப்பராயன் நகர் சாலை ஏலருமல் பள்ளம் ஆற்றில் ரூபாய் 2 கோடியே 83 இலட்சம் செலவில் ஒரு பாலம் ;

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டத்தில் மலட்டாறு ஆற்றில் திருவாமூர் ஊராட்சியில் ரூபாய் 8 கோடியே 13 இலட்சத்து 44ஆயிரம் செலவில் ஒரு பாலம் ;

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் குடகனாறு ஆற்றில் மணலூர் ஊராட்சியில் சித்தரேவு தாண்டிக்குடி சாலையில் ரூபாய் 8 கோடியே 52 இலட்சத்து 69ஆயிரம் செலவில் ஒரு பாலம் ;

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டத்தில் நலுங்கு பாறை ஆற்றில் வாச்சாத்தி அரசநத்தம் இடையில் ரூபாய் 3 கோடியே 83 இலட்சம் செலவில் ஒரு பாலம் ;

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டத்தில் செல்லபூரம்மன் ஓடையில் ரூபாய் 5 கோடியே 12 இலட்சத்து 20ஆயிரம் செலவில் ஒரு பாலம் ;

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் கொரட்டி ஆற்றில் ரூபாய் 5 கோடியே 57 இலட்சம் செலவில் ஒரு பாலம் ;

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் பாம்பாறு ஆற்றில் ரூபாய் 4 கோடியே 32 இலட்சத்து 20 ஆயிரம் செலவில் ஒரு பாலம் ;

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டத்தில் வேப்பனப்பள்ளி தீர்த்தம் சாலை கத்திரிபள்ளியில் ரூபாய் 7 கோடியே 1 இலட்சத்து 40 ஆயிரம் செலவில் ஒரு பாலம் ;

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டத்தில் ஒட்டப்பள்ளி பட்டிபடுகு சாலையில் ரூபாய் 3 கோடியே 59 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் ஒரு பாலம் ;

மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தில் பதினெட்டாம்குடி ஓடையில் 1 கோடியே 42 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;



நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் வட்டத்தில் புதுபட்டி கெடமலை சாலையில் 3 கோடியே 12 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

புதுப்பட்டி அதே சாலையில் 2 கோடியே 68 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் மற்றொரு பாலம் ;

சேலம் மாவட்டம், பி.என்.பாளையம் வட்டத்தில் வில்வனூர் மாயவன் கோவில் சாலையில் வசிஸ்டர் ஆற்றில் 3 கோடியே 91 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

ஆத்தூர் வட்டத்தில் துலுக்கானூரில் வசிஸ்டர் ஆற்றில் 4 கோடியே 27 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

கங்கவள்ளி வட்டத்தில் வேப்படி பாலக்காடு சாலையில் 1 கோடியே 74 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

அயோத்தியா பட்டணம் வட்டத்தில் திருமணிமுத்தாரில் 1 கோடியே 99 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

பி.என்.பாளையம் வட்டம் வைத்திய கவுண்டன் புதூர் ஏத்தாப்பூர் சாலையில் வசிஸ்டர் ஆற்றில் 5 கோடியே 89 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

அதே பி.என்.பாளையம் வட்டம் இடையாப்பட்டி ஊராட்சியில் வசிஸ்டர் ஆற்றில் குறுக்கே 3 கோடியே 76 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

நீலகிரி மாவட்டம், உதகை வட்டத்தில் தாவணி மல்லிக்கோரை சாலையில் 3 கோடியே 7 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம்;

திருப்பூர் மாவட்டம், குண்டடம் வட்டத்தில் தாராபுரம் வெள்ளக்கோவில்சாலை அமராவதி ஆற்றில் 14 கோடி ரூபாய் செலவில் ஒரு பாலம்;

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் வட்டத்தில் பட்டுவனாச்சி ஓடையில் 4 கோடியே 10 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டத்தில் ஆறுமுக மங்களம் சாலையில் 3 கோடியே 36 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம்;

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டத்தில் டி.புதுபட்டி சின்னையபுரம் சாலையில் 3 கோடியே 97 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்தில் உப்பாறு ஆற்றில் குறுக்கே இரத்தினகுடிசாலை ஆர்.வளவனூர் ஊராட்சியில் 10 கோடியே 91 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்தில் களத்தில் வென்றார் பேட்டை சாலையில் நந்தியூர் கால்வாயில் 10 கோடியே 19 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டத்தில் புல்லம்பாடி வைக்கல் புரந்தகுடி ரெத்மாங்குடி சாலையில் குறுக்கே 2 கோடியே 81 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டத்தில் வெங்கடாசலபுரம் பிரான்சேரி சாலையில் சித்தாறு ஆற்றில் 10 கோடியே 63 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஒன்றியம் பெருமாள்கோவில் அருகே பேயாற்றின் குறுக்கே 2 கோடியே 28 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

வேலூர் மாவட்டம், அதே அணைக்கட்டு ஒன்றியத்தில் பெருமாள்கோவில் அருகே பேயாற்றின் குறுக்கே 2 கோடியே 36 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

வேலூர் மாவட்டம், அதே அணைக்கட்டு ஒன்றியத்தில் பொய்கை கிராமத்தில் சதுப்பேரி கால்வாய் குறுக்கே 1 கோடியே 65 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

விழுப்புரம் மாவட்டம், மரக்கானம் வட்டம், அன்னம்புதூர் ஓமந்தூர் சாலையில் நரசிம்மனாறு ஓடையின் குறுக்கே 5 கோடியே 51 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம், சிறுவாடியில் செஞ்சி ஆற்றில் குறுக்கே 6 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

விழுப்புரம் மாவட்டம், வள்ளம் வட்டத்தில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே கொங்கராபட்டு மணியம்பட்டு இடையே 9 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், கணக்கநேந்தல் ஜோகில்பட்டி இடையே குண்டாறு ஆற்றின் குறுக்கே 9 கோடியே 89 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் ;

என மொத்தம் 34 பாலங்களை 177 கோடியே 84 இலட்சத்து 60 ரூபாய் செலவில் 18 மாவட்டங்களில் கட்டுவதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்குரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பாலங்களின் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

# கூட்டுறவுச் சங்கங்கள் ஜி.எஸ்.டி. வரியில் இருந்து விலக்குப் பெறுமா?

## மக்களவையில் டி.ஆர்.பாலு கேள்வி!

புதுடெல்லி, டிச. 21 -

கூட்டுறவுச் சங்கங்கள் தயாரித்து விற்பனை செய்யும் பொருட்களுக்கும் அவற்றின் சேவைகளுக்கும் ஒன்றிய அரசின் ஜி.எஸ்.டி. எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்கப்படுமா? இது தொடர்பாக நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், மாநில அரசுகள் ஒன்றிய கூட்டுறவு அமைச்சகத்துக்கு கோரிக்கைகள் எதுவும் வைத்துள்ளனவா? அப்படியானால், அவற்றின் மீது ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசு அளிக்கும் நிதியுதவி விவரங்கள் என்ன? என்று நாடாளுமன்ற தி.மு.க. மக்களவைக் குழுவின் தலைவரும் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

இந்த கேள்விக்கு நேற்று முன்தினம் 17.12.2024 ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா மக்களவையில் கேள்வி நேரத்தில் எழுத்துப்பூர்வமாக விரிவான பதிலளித்தார். கடந்த 06.07.2021இல் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே கூட்டுறவு அமைச்சகம், மற்ற நிறுவனங்களைப் போல கூட்டுறவு நிறுவனங்களுக்கும் கிடைக்காத வரிச் சலுகைகள் பற்றிய விவரங்களை அனைத்து மாநிலங்கள், ஒன்றிய பகுதிகளின் அரசுகளிடம் இருந்து பெற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. அதுபோல, 25.11.2024 அன்று தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத் துறை அமைச்சரிடம் இருந்து ஜி.எஸ்.டி. வரிவிலக்கு உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய கோரிக்கை ஆவணம் ஒன்றும் பெறப்பட்டது என்று தெரிவித்தார். அண்மையில், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் விற்பனை செய்யும் மொலாசஸ் மீதான ஜி.எஸ்.டி. 28 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது என்றும் தனது பதிலில் அமைச்சர் அமித் ஷா மக்களவையில் தெரிவித்தார்.



ஊரக வறுமை அகன்றிட கூட்டுறவுத் தயாரிப்பக்கள் மீது ஜிஎஸ்டி வரி விலக்கு அவசியம் டி.ஆர்.பாலு வலியுறுத்தல்: தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தின்போது பேசிய டி.ஆர். பாலு எம்.பி., தற்போது கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்யும் பொருட்கள் மீது ஜி.எஸ்.டி. உள்ளது. வரிவிலக்கு அளிக்கப்பட்டால்தான் அவற்றின் லாபம் ஈட்டும் திறன் மேம்படும். இதனால் லட்சோபலட்சம் கைவினைக் கலைஞர்கள், நெசவாளர்கள் உள்ளிட்ட பல்வேறு கைத்தொழில் வல்லுநர்களின் வாழ்வாதாரம் உறுதி செய்யப்படும். மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் வேலைவாய்ப்புகளை உருவாக்க பெரும் பங்களிக்கின்றன. எதிர்வரும் 2030ஆம் ஆண்டில் மொத்தம் 11 கோடி வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதுடன் இந்திய நாட்டின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 5 சதவீதம் அளவுக்கு கூட்டுறவு நிறுவனங்களின் செயல்பாடுகள் பங்களிக்கும் ஆற்றல் பெற்றுள்ளது என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாகவும் டி.ஆர்.பாலு தனது உரையில் குறிப்பிட்டார்.

எனவே, கூட்டுறவுச் சங்கங்களின் இத்தகைய முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, நலிவுற்றுள்ள கூட்டுறவு நிறுவனங்களின் நிதி வலுவை மீட்டெடுக்க ஒன்றிய அரசு முழுமையான ஆய்வுகளை மேற்கொள்ளுமா? மேலும், தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத் துறை அமைச்சர், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களை டெல்லியில் நேரில் சந்தித்து 25.11.2024 அன்று விடுத்த ஜி.எஸ்.டி. வரி விலக்கு தொடர்பான கோரிக்கை உரிய பரிந்துரையுடன் நிதி அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதா? அப்படியானால் அதன் விளைவாக என்ன முடிவு எடுக்கப்பட்டுள்ளது? என்றும் பல்வேறு துணைக் கேள்விகளை நேற்று மக்களவையில் டி.ஆர்.பாலு எழுப்பினார்.

இணை அமைச்சர் முரளிதர் மொஹோலே பதில்: இதற்கு பதிலளித்த ஒன்றிய கூட்டுறவுத் துறை இணை அமைச்சர் முரளிதர் மொஹோலே, ஜி.எஸ்.டி. தொடர்பான முடிவுகள் எடுக்கும் அதிகாரம் ஜி.எஸ்.டி. குழுவிடம்தான் உள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு இந்த விஷயத்தில் ஜி.எஸ்.டி. குழுவிடம்தான் தனது கோரிக்கையை எடுத்துச் செல்ல வேண்டும் என்று தெரிவித்தார்.

## கழக முன்னோடி – புதுச்சேரி வடக்கு மாவட்ட

# அவைத் தலைவர் வழக்கறிஞர் ர.பலராமன் மறைவு!

## புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ. இரங்கல்!

புதுச்சேரி, டிச.21-

புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடி வழக்கறிஞர் ர. பலராமன் (88) அவர்களின் மறைவிற்கு புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா விடுத்த இரங்கல் செய்தி வருமாறு: -



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பேச்சாற்றலால் ஈர்க்கப்பட்டு 1973-ஆம் ஆண்டு கழகத்தில் உறுப்பினராக தம்மை இணைத்துக்கொண்டு கழகப் பணியை தொடங்கியவர் ர. பலராமன் (வயது 88) அவர்கள். வழக்கறிஞர் பணியோடு கழகப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். மறைந்த எம்.ஏ. சண்முகம் அவர்கள் புதுச்சேரி மாநில கழக அமைப்பாளராக இருந்தபொழுது மாநில அவைத்தலைவராக இருந்து கழகத்தை வழிநடத்தியவர். தொடர்ந்து தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில வழக்கறிஞர் அணி அமைப்பாளர், புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் புதுச்சேரி வடக்கு மாவட்ட அவைத் தலைவராக பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். தமது இளமைப்பருவம் முதல் இறுதி மூச்சு வரை கழகம் அறிவித்த அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றவர். கழகம் சார்பில் பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறைவாசம் அனுபவித்தவர். கழகத்தைச் சேர்ந்த ஏழை, எளியவர்களுக்கு இலவசமாக வழக்காடிய பெருமகனார்.

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் செயல்திறனையும், நமது இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் செயல்பாடுகளையும் வியந்து பாராட்டியதோடு, அவர்களின் செயல்பாடுகளை புதுச்சேரி மாநில கழகத்தினருக்கு தினந்தோறும் எடுத்துரைத்து, கழகத்தினரை உற்சாகப்படுத்தியவர். இப்படி கழகமே தமது மூச்சாக பணியாற்றிய புதுச்சேரி மாநில கழகத்தின் மூத்த முன்னோடி வழக்கறிஞர் ர. பலராமன் அவர்கள் வயது முதிர்வின் காரணமாக உடல்நலக்குறைவால் நம்மைவிட்டு பிரிந்தது புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பேரிழப்பாகும். தங்கள் குடும்பத்தில் ஒருவரை இழந்த உணர்வோடு, அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்திற்கும், கழகத்தினருக்கும் புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகம் தமது நெஞ்சார்ந்த அஞ்சலியை செலுத்துகிறது.

இவ்வாறு புதுச்சேரி இரா. சிவா இரங்கல் தெரிவித்துள்ளார்.

## நீதித்துறை சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல்! இன்றைய சூழ்நிலையில் – அரசியலமைப்பு சாசனத்தை கொண்டாடுவதற்கான

# எந்தக் காரணத்தையும் பா.ஜ.க. அரசு நமக்கு வழங்கவில்லை!

## மாநிலங்களவையில் — பி.வில்சன் குற்றச்சாட்டு!

புதுடெல்லி,டிச.20-

நீதித்துறை சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், இந்றைய சூழ்நிலையில் – அரசியலமைப்பு சாசனத்தை கொண்டாடுவதற்கான எந்த காரணத்தையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு நமக்கு வழங்கவில்லை என்று மாநிலங்களவையில் உரையாற்றிய கழக உறுப்பினர் பி.வில்சன் குறிப்பிட்டார்.

“இந்திய அரசியலமைப்பின் 75 ஆண்டுகால மகத்தான பயணம்” என்ற தலைப்பில் நாடாளுமன்றத்தில் கழக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் அவர்களின் உரை வருமாறு:

கடந்த 10 ஆண்டுகளில், நமது அரசியல் சாசனத்தின் அடித்தளத்தை தகர்க்கும் வகையில் இந்த அரசு தனது அதிகாரத்தில் உள்ள அனைத்தையும், சில நேரங்களில் அதிகாரத்தில் இல்லாதவற்றையும் கூட செய்திருக்கிறது.

நாடாளுமன்றத்தை பலவீனப்படுத்துவது முதல் பிற அரசியலமைப்பு அமைப்புகளின் நிறுவன ஒருமைப்பாட்டை சிதைத்தல், அரசாங்க அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் குடிமக்களின் அடிப்படை உரிமைகளை பறித்தல் போன்றவற்றின் மூலம் நமது அரசமைப்புச் சட்டத்தின் கட்டுமானமே இந்த அரசால் தகர்த்தெறியப்பட்டுள்ளது.

முதலாவதாக, நாடாளுமன்ற இறையாண்மையை எடுத்துக் கொண்டால், இந்த மாபெரும் அவையை இந்த அரசு மதித்துள்ளதா என்ற கேள்வி எழுகிறது.

### மணிப்பூர் படுகொலைகள்! விவாதம் நடத்தவில்லை!

இந்த 17 வது மக்களவையில் 221 க்கும் மேற்பட்ட மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால் இவற்றில் மூன்றில் ஒரு பங்கு மசோதாக்கள் ஒரு மணி நேரத்திற்கும் குறைவான விவாதம் அல்லது விவாதம் இல்லாமலேயே நிறைவேற்றப்பட்டன. மணிப்பூரில் அரங்கேறிய மிக மோசமான இனப்படுகொலைகள் குறித்து கூட எந்த விவாதமும் இந்த அவையில் நடத்தப்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையில், நாடாளுமன்ற நிலைக்குழுக்கள் என்பது வெறும் காகித அளவிலான குழுக்களாக சுருங்கிவிட்டன. உதாரணமாக இந்த அவை நடவடிக்கைகளின் போது வெறும் 16% மசோதாக்கள் மட்டுமே விரிவான ஆய்வுக்காக நிலைக் குழுக்களுக்கு அனுப்பப்பட்டன. இதற்கு நேர்மாறாக, ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது, 71% மசோதாக்கள் நிலைக்குழுக்களுக்கு அனுப்பப்பட்டன. முக்கிய மசோதாக்கள் எந்த விவாதமும் இன்றி நிறைவேற்றப்பட்டதால், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியே அதன் மீது கருத்து தெரிவிக்கும் நிலை இருந்தது.

### நீதிபதிகளின் பதவி உயர்வில் தலையிடும் அரசு!

நீதித்துறையின் பக்கம் சென்றால், இந்த நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள அறிவிக்கப்படாத அவசர நிலை நீதித்துறையின் சுதந்திரத்திற்கு அரசாங்கம் விடுத்துள்ள அச்சுறுத்தல் என்றே எடுத்துக்கொள்ள முடியும்.

சில உயர்நீதிமன்ற நீதிபதிகள் பதவி உயர்வு அல்லது ஓய்வுக்குப் பிந்தைய வேலைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அரசியல் கட்சியின் கூட்டங்களில் கலந்து கொண்டு இந்த நாட்டில் கேள்விப்படாத மொழியில் உரைகளை நிகழ்த்த தொடங்கியுள்ளனர். நீதிபதிகளின் கொலீஜியம் இடமாற்றத்தை சட்ட அமைச்சகம் செயல்படுத்தவில்லை.

உயர் நீதிமன்றங்களுக்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் நியமிக்கப்படும் நீதிபதிகளின் பதவி உயர்வு நியமனங்களில் அரசு தலையிடுகிறது.

ஒவ்வொரு முறையும், நேர்மையான நீதிபதிகள் இரக்கமின்றி இடமாற்றம் செய்யப்படுகிறார்கள் - அவர்களுக்கு நோய்வாய்ப்பட்ட பெற்றோர் அல்லது மனைவி இருக்கும் சூழ்நிலைகளில் கூட இந்த நிலையே நிலவுகிறது. மேலும், தங்கள் மனசாட்சிப்படி செயல்படும் நீதிபதிகளின் பதவி உயர்வு சட்ட அமைச்சகத்தால் அறிவிக்கப்படுவதில்லை என்பதுடன் உச்ச நீதிமன்றம் தனது பரிந்துரைகளை பலமுறை வலியுறுத்திய போதிலும் சுமார் ஒன்றரை ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. நீதித்துறையின் சுதந்திரத்தை இப்படித்தான் இந்த அரசு நிலை நிறுத்தியுள்ளது என்கிற போது இது கொண்டாடப்பட வேண்டிய விஷயமா என்கிற ஐயம் நிலவுகிறது.

### இடஒதுக்கீட்டை தகர்த்தெறியும் நடவடிக்கை!

மூன்றாவதாக, சமூக நீதி என்ற கருத்தாக்கத்திற்குச் சென்றால், உயர் கல்வி நிறுவனங்கள் உட்பட கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் தகுதி என்ற போர்வையில் இடஒதுக்கீட்டை தகர்த்தெறியும் வகையில், ஒன்றிய அரசின் ஒவ்வொரு நடவடிக்கையையும் அமைந்துள்ளது.



நீதித்துறையில், 82% நீதிபதிகள் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்தியாவில் கடந்த 75 ஆண்டுகளாக இடஒதுக்கீடு மறுக்கப்பட்ட ஒரே அமைப்பு என்பது உயர் நீதித்துறை மட்டுமே. ஒவ்வொரு முறையும் இந்தப் பிரச்சினையை எழுப்பும்போது, அரசியல் சாசனம் அனுமதிக்கவில்லை என்றே ஒன்றிய அரசு கூறுகிறது. மாறாக ஒன்றிய அரசு என்ன செய்தது. அரசியல் சட்டத்தை திருத்தவில்லையா? ஒன்றிய அரசு ஏன் அரசியல் சட்டத்தை திருத்தி இடஒதுக்கீடு வழங்கக்கூடாது?

மேலும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க அரசியல் சட்ட இடஒதுக்கீட்டுக்காக நேரு அவர்கள் கொண்டு வந்த முதல் திருத்தமே இந்தியா முழுவதும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீட்டை சாத்தியமாக்குவதாக இருந்தது. 10 ஆண்டுகளில் இந்த ஒன்றிய அரசு என்ன செய்தது?

### சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த அஞ்சுகிறது!

பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு இட ஒதுக்கீடு வழங்க திருத்தம் செய்துள்ளது. இதற்கு நேர்மாறாக எஸ்.சி., எஸ்.டி. மற்றும் ஓ.பி.சி., பிரிவினருக்கான இட ஒதுக்கீடு 50 சதவீதத்தை தாண்டும் என்ற அச்சத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த இந்த அரசு அஞ்சுகிறது.

1931- ம் ஆண்டின் தரவுகள் மிகவும் பழையனவாகவும், மதிப்பாய்வு செய்யப்பட வேண்டிய நிலையிலும் உள்ளது. நீங்கள் இந்திரா சஹானி வழக்கின் தீர்ப்புக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு, நீதித்துறையால் கொண்டுவரப்பட்ட எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி., பிரிவினருக்கான செயற்கையான 50 சதவீத இட ஒதுக்கீட்டை உயர்த்தும் வகையில், அரசியல் சட்டத்தை திருத்த எந்த நடவடிக்கையும் இந்த அரசு எடுக்கவில்லை. இது கொண்டாடத்தக்கதா?

### மொழி உரிமை துடைத்தெறியப்படுகிறது!

நான்காவது மொழி உரிமையை எடுத்துக்கொண்டால், இந்தித் திணிப்பின் காரணமாக மொழிவாரி பன்முகத்தன்மைக்கான அரசியலமைப்பு உத்தரவாதம் துடைத்தெறியப்படுகிறது. சட்டப்பிரிவு 348-ஐ மீறி ஆங்கிலத்திற்கு பதிலாக இந்தியில் பெயரிடப்பட்ட மசோதாக்களை இந்த மோடி அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. இதுதான் அரசியல் சாசனத்தின் மீது பிரதமர் மோடி அவர்கள் தலைமையிலான பாஜக அரசு வைத்திருக்கும் மரியாதையா?

அதுமட்டுமின்றி ஆளுநர்கள் மாநில சுயாட்சிக்கும், கூட்டுறவு கூட்டாட்சிக்கும் சாவு மணி அடிக்கும் வகையில் அரசியல் எதிரிகளாக செயல்படுகிறார்கள்.. மாநில அரசுகளின் கொள்கைகளில் இருந்து முரண்படுவது, மாநில சட்டமன்றம் நிறைவேற்றும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதை தாமதப்படுத்துவது, தவிர்ப்பது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள். இதையும் நாம் கொண்டாட வேண்டுமா?

### தென்மாநிலங்களுக்கு நியாயமற்ற நிதி ஒதுக்கீடு!

இறுதியாக, ஜி.எஸ்.டி., மற்றும் நியாயமற்ற நிதி ஒதுக்கீட்டின் மூலம் தென் மாநிலங்களை பொருளாதார ரீதியாக அடிமைப்படுத்துவது. இந்தியாவின் வளர்ச்சியின் உந்துசக்தியாக இருக்கும் தென் மாநிலங்களானது பாஜகவை நிராகரிக்கும் ஒரே காரணத்திற்காகவே தண்டிக்கப்படுகின்றன. எனவே, இத்தகைய காரணங்களினாலும், நமது அரசமைப்புச் சட்டத்திற்கு பிரதமர் மோடி அவர்கள் தலைமையிலான பா.ஜ.க. அரசு இழைத்துள்ள அநீதியாலும் இன்றைய சூழ்நிலையில் நமது அரசியலமைப்பைக் கொண்டாடுவதற்கான எந்த காரணத்தையும் இந்த பாஜக அரசு நமக்கு வழங்கவில்லை.

2029 - ம் ஆண்டு ஒன்றியத்தில் திமுக கூட்டணி ஆட்சிப்பொறுப்பில் அமரும்போது நிச்சயம் அரசியலமைப்பு சாசனத்தை கொண்டாடுவோம்!

இவ்வாறு பி.வில்சன் தனது உரையில் முழங்கியுள்ளார்.



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் நல உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார். இதில் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ., தமிழன் பிரசன்னா உட்பட கழக நிர்வாகிகள், முன்னணியினர் கலந்து கொண்டனர்.